# பெரிய வெள்ளி ஆராதனை ஒழுங்கு /Good Friday Service

**29th மார்ச் / March, 2024**

✝ **ஆராதனைக்கு அழைப்பு** — **திரு. ஆசீர்**
Call to Worship — Mr. Asir

**இறைவணக்கப்பாடல்** — **பாடகர் குழு**
Introit — Choir

**ஜெபம்** — **திரு. ஆசீர்**
Prayer — Mr. Asir

✝ **தொடக்கப் பாடல்** — **சபையார் இணைந்து**
Opening Song — Congregation

## இரத்தம் காயம் குத்தும்

*1. இரத்தம் காயம் குத்தும்
நிறைந்து, நிந்தைக்கே
முள் கிரீடத்தாலே சுற்றும்
சூடுண்ட சிரசே
முன் கன மேன்மைகொண்ட
நீர் லச்சை காண்பானேன்?
ஐயோ, வதைந்து நொந்த
உம்முன் பணிகிறேன்.*

2 *நீர் பட்ட வாதை யாவும்
என் பாவப் பாரமே;
இத்தீங்கும் நோவும் சாவும்
என் குற்றம் கர்த்தரே.
இதோ, நான் என்றுஞ் சாக
நேரஸ்தன் என்கிறேன்;
ஆனாலும் நீர் அன்பாக
என்னைக் கண்ணோக்குமேன்*

3 *நீர் என்னை உமதாடாய்
அறியும் மேய்ப்பரே;
முன் ஜீவன் ஊறும் ஆறாய்
என் தாகம் தீர்த்தீரே;
நீர் என்னைப் போதிப்பிக்க
அமிர்தம் உண்டேனே;
நீர் தேற்றரவளிக்க
பேரின்பமாயிற்றே.*

4 *உம்மண்டை இங்கே நிற்பேன்,
என்மேல் இரங்குமேன்;
விண்ணப்பத்தில் தரிப்பேன்,
என் கர்த்தரை விடேன்;
இதோ, நான் உம்மைப் பற்றி
கண்ணீர் விட்டண்டினேன்;
மரிக்கும் உம்மைக் கட்டி
அணைத்துக்கொள்ளுவேன்.*

✝ **மாறி வாசித்தல்** — **சபையார் இணைந்து**
Responsive Reading — Congregation

வழி நடத்துபவர் : தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

சபையார் : ஏனெனில் கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்.

வழி நடத்துபவர் : தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல்

நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?
யாவரும் : ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை.
ஆமென்.

✝ ***தந்தை போற்றி*** — ***சபையார் இணைந்து***
Gloria Patri — Congregation

***ஆயரின் ஜெபம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Pastoral Prayer — Rev. Vijay Joseph

***பரமண்டல ஜெபம்*** — ***சபையார் இணைந்து***
Lord's Prayer — Congregation

***சிறப்புப் பாடல்*** 1 — ***பாடகர் குழு***
Special Song 1 — Choir

✝ ***காணிக்கைப் பாடல்*** — ***சபையார் இணைந்து***
Offertory Song — Congregation

<u>குருசினில் தொங்கிய குருதியும் வடிய</u>

குருசினில் தொங்கிய குருதியும் வடிய கொல்கதா மலைதனிலே - நம்
குருவேசு சுவாமி கொடுந் துயர், பாவி, கொள்ளாய் கண் கொண்டு.

1. சந்திரசூரிய சகல வான் சேனைகள் சகியாமல் நாணுதையோ! - தேவ
   சுந்தர மைந்த னுயிர் விடுகாட்சியால் துடிக்கா நெஞ்சுண்டோ?
2. எருசலே மாதே மறுகி நீயழுது, ஏங்கிப் புலம்பலையோ? – நின்
   எருசலையதிபன் இள மணவாளன், எடுத்த கோலமிதோ?
3. சிரசினில் முண்முடி உறுத்திட, அறைந்தே சிலுவையில் சேர்த்தையோ! - தீயர்
   திருக்கரங் கால்களில் ஆணிகளடித்தார், சேனைத்திரள் சூழ
4. பாதகர் நடுவில் பாவியினேசன் பாதகன் போல் தொங்க, யூத
   பாதகர் பரிகாசங்கள் பண்ணிப் படுத்திய கொடுமைதயை.
5. ஈட்டியால் சேவகன் எட்டியே குத்த, இறைவன் விலாவதிலே – அவர்
   தீட்டிய தீட்சைக் குருதியும் ஜலமும், திறந்தூற்றோடுது பார்

✝ ***பூலோகத்தாரே யாவரும்*** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

***சிறப்புப் பாடல் 2*** — ***பாடகர் குழு***
Special Song 2 — Choir

✝ ***திருமறைப் பாடம்*** — ***திரு. சதீஷ் ஆபிரகாம்***
Scripture Reading — Mr. Sathish Abraham
***மத்தேயு*** 27 : 45 - 56
Matthew 27 : 45 - 56

✝ ***முடிவுப் பாடல்*** — ***சபையார் இணைந்து***
Closing Song — Congregation

<u>கல்வாரி அன்பை எண்ணிடும் வேளை</u>

கல்வாரி அன்பை எண்ணிடும் வேளை
கண்கள் கலங்கிடுதே
கர்த்தா உம் பாடுகள் இப்போதும் நினைத்தால்
நெஞ்சம் நெகிழ்ந்திடுதே

1. கெத்சமனே பூங்காவிலே
கதறி அழும் ஓசை
எத்திசையும் தொனிக்கின்றதே
எங்கள் மனம் திகைக்கின்றதே
கண்கள் கலங்கிடுதே

2. சிலுவையில் அறைந்து வதைத்தனரோ
உம்மை செந்நிறமாக்கினரோ
அப்போதும் அவர்க்காய் வேண்டினீரோ
அன்போடு அவர்களைக் கண்டீரன்றோ
அப்பா உம் அன்பு பெரிதே

3. என்னையும் உம்மைப்போல் மாற்றிடவோ
உம் ஜீவன் தந்தீரென் இயேசுவே
எந்தனைத் தரைமட்டும் தாழ்த்துகிறேன்
தந்துவிட்டேன் அன்புக் கரங்களிலே
ஏற்று என்றும் நடத்தும்

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்*** — ***சபையார் இணைந்து***
Benediction Song — Congregation

*உன் நாமமே உண்மையே*
*விசுவாசிக்கத் தாருமே*
*நீரே இரட்சகாரும்*
*நீரே இயேசுவானவர்*
*இயேசுவே மேசியாவே*
*நீரே ஆண்டவரே.*

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ Indicates Congregation standing